சுற்றுநிருபம்:- 09/2015

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை
35, அம்மன் வீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்
2015.06.29

வடக்கு மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும்
சமாசங்களின் தலைவர்களுக்கும்

## ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு

ஆணைக்குழுவின் 2015.06.29ஆம் திகதிய 07/2015 சுற்றுநிருபத்தின் 1.3 பந்தியின் பால் தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

மேற்படி பந்தியிற் குறிப்பிட்டமைக்கு அமைவாக ஆரம்ப விசாரணை செய்வதற்கென பொருத்தமான அலுவலரை சங்கத்திலிருந்து நியமிக்க முடியாமல் வேறு சங்கங்களிலிருந்து அல்லது அலுலகங்களிலிருந்து நியமிக்க வேண்டிய தேவை எழும் பட்சத்தில் அவர்களுக்கான விசாரணைக் கொடுப்பனவைச் செலுத்த வேண்டியிருக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் எமது 06/2008 இலக்கமுடைய 2008.06.26 ஆம்திகதிய சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவின் அடிப்படையிலேயே இவர்களது கொடுப்பனவையும் வழங்கலாம் என 2015.06.29 ஆம் திகதிய ஆணைக்குழுவின் அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர்களுக்கான பிரயாணப்படிக் கொடுப்பனவுக் கோரிக்கைகள் எழும் பட்சத்தில் எமது 04/2015 இலக்கமுடைய 2015.04.29 ஆம்திகதிய சுற்று நிருபத்திற்கு இணங்க அதனை வழங்க முடியும்.

*குறிப்பு*: ஆரம்ப/ஒழுக்காற்று/மேன்முறையீட்டு விசாரணை உத்தியோகத்தர்கள் தமது உந்துருளியைக் குறித்த பிரயாணத்துக்குப் பயன்படுத்துகையில் கிலோமீற்றருக்கு ரூபா 2.00 என்ற அடிப்படையில் போக்குவரத்துச் செலவினை மீளளிக்க முடியும். இருந்த போதும் இம் மீளளிப்புக் கோரிக்கைகளின் போக்குவரத்து மார்க்கம் 04/2015 சுற்றுநிருபத்தின் 4 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு குறைந்த போக்குவரத்துச் செலவின/ கட்டணம் அறவிடும் மார்க்கமாக இருப்பதை கொடுப்பனவு அதிகாரிகளே முடிவு செய்தல் வேண்டும்.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை